IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE

(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

OS.NO. - 176/2021

P.W.1 - Tr.Rajaselvendiran

DATE - 13.08.2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 13.08.2025.

வா.சா.1 குறுக்கு விசாரணை–தொடர்ச்சி

எனக்கு ஜானகி அம்மாவையும், அவரது மகனையும் சுமார் 5 வருடமாக தெரியும். அவரது மகன் கிரி தலைமுடி வியாபாரம் செய்கிறார். அதை ஏற்றுமதி செய்கிறார். அவர் ஏற்றுமதி செய்கிறார் என்பதற்கு ஆதரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. அவர் என்ன படித்திருக்கிறார் என்று எனக்கு தெரியாது. கிரி அருணாசல நகர் , குடியாத்தத்தில் குடியிருந்தார். கிரி குடுமபத்தை பற்றிய விவரம் எனக்கு தெரியும் . கிரியின் அப்பா பெயர் வெங்கடேசன். சரியாக ஞாபகம் இல்லை. நான் பொய்யாக சொல்கின் என்றும் கிரி இன்சினியரிங் படித்து விட்டு , ஐ.டி கம்பெனியில் வேலை செய்து வந்தார் என்றால் சரியல்ல. கிரி முடி வியாபாரம் செய்யவில்லை என்றும் அவர் யார் என்றே எனக்கு தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டு, கிரி என்பவரே பாண்டு எழுதுவதற்கு ஆளை கூட்டி வந்தார். ஜானகி அம்மா, கிரி பாண்டு எழுதுவதற்கான நபர் மற்றும் சாட்சிகள் 2 பேரை என்னுடைய வீட்டிற்கு கூட்டி வந்தார். செந்தில்குமார், பழனிச்சாமி இருவரும் சாட்சிகள் ஆவர். செந்தில் குமார் வியாபாரம் செய்கிறார். பழனிச்சாமி கணக்காளர். சாட்சிகளை கிரி தான் கூட்டி வந்தார். வா.சா.ஆ.1 புரோ நோட்டில் ஜானகி அம்மா கணவர் பெயர் ஆறுமுகம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி.

பாண்டில் ஆறுமுகம் மனைவி ஜானகி என்றும் மேற்படி முகவரியில் வசித்து வரும் நாகேஸ்வரன் குமாரர் கிரி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. எனக்கு கிரியையும் தெமரியாது, ஜானகி அம்மாவையும் தெரயாது, அவர்களது குடும்பத்தைப் பற்றியும் தெரியாது என்றும் நானும் , பாண்டு எழுதியவரும் , சாட்சிகளும் கூட்டாக சேர்ந்து கூட்டு சதி செய்து பொய்யான ஆவணம் தயாரித்து பணம் பறிப்பதற்காக தயார் செய்தேன். என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பு ஜானகி அம்மாளுக்கும், கிரி என்பவருக்கும் அனுப்பினேன் என்றால் சரி. வா.சா.ஆ.3 அஞ்சல் ஒப்புதல் அட்டை. வா.சா.ஆ.3 ல் அஞ்சல் ஒப்புதல் அட்டை, வா.சா.ஆ.2 இரண்டிலும் ஜானகி அம்மாள் கைரேகை தான் செய்துள்ளார் என்றால் தபால்காரர் தபாலை சார்வு செய்யும் போது ரேகை வைத்திருக்கலாம். கிரி 13.05.2021 அன்று இறந்துவிட்டார். 13.05.2021 ல் இறந்த கிரிக்கு அந்த விவரம் தெரியாமல் 29.09.2021 ல் வழக்கறிஞர் அறிவிப்பை கிரிக்கு அனுப்பினேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் பதிலுரையில் கையெழுத்து தன்னுடையது அல்ல என சொல்லப்பட்ட நிலையில் புரோநோட்டில் உள்ள கையெழுத்து ஜானகி அம்மாவுடையது என நிரூபணம் செய்ய நடவடிக்கை எடுத்தேனா என்றால் புரோநோட்டு தாக்கல் செய்துள்ளேன். ஜானகி அம்மா எனது வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பதில் அனுப்பியுள்ளார் என்றால் சரி. ஜானகி அம்மாவின் பதல் அறிவிப்பு பி.வா.சா.ஆ.1. பிரதிவாதியின் பதில் அறிவிப்பில் புரோநோட்டில் கையெழுத்து செய்யவில்லை என்றும் எந்த கடனும் என்னிடம் வாங்கவில்லை என்றும் சொல்லியிருந்தார் என்றால் பொய்யான சொல்லியுள்ளார். எனது முதல் விசாரணையில் பிரதிவாதி ஜானகியின் கையெழுத்தினை நிரூபணம் செய்ய கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப நடவடிக்கை தயாராக உள்ளேன் என

(பிரதிசவாதி தரப்பு வழக்கறிஞர் பிரதிவாதியின் கையெழுத்து செய்த ஆவணங்களை வாதி கோரியவாறு கையெழுத்து நிபுணர் பரிசோதனைக்கு அனுப்ப வாதி மனு செய்யும் பட்சத்தில் தாக்கல் செய்ய தயாராக இருப்பதாக கூறி ஆவணங்களை தாக்கல் செய்ய காவ அவகாசம் கோருகிறார்)

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

N. Raja Selvarizan

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 13.08.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

13.8.25

Additional District Judge(FTC),

Vellore.